# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**M.C. 2 /2023 Date : 07.04.2026 R.W. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர்; | கண்ணாயிரம் | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 61 |
| 1ம் மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர். வழக்கறிஞர்கள் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

1. எதிர்மனுதாரர் மணிகண்டனை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 20 ஆண்டுகளாக கொத்தனார் வேலைக்கு வரும் வகையில் எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் மணிகண்டன் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் மணிகண்டன் என்ன ஊர் என்றால் பாலக்கொல்லையை சேர்ந்தவர். எதிர்மனுதாரர் மணிகண்டனுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் அவரை சேர்த்து 4 நபர்கள்.

2. எதிர்மனுதாரர் மணிகண்டன் தந்தை பெயர் என்ன என்றால் தெரியாது. 20 வருடங்களுக்கு முன்பு எதிர்மனுதாரர் மணிகண்டன் எங்கு இருந்தார், என்ன வேலை செய்துகொண்டிருந்தார் என்றால் கொத்தனார் வேலை செய்து கொண்டிருந்தார். எதிர்மனுதாரர் மணிகண்டனின் முதல் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுக்கு எங்கு எப்போது கல்யாணம் ஆயிற்று என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

3. எதிர்மனுதாரர் மணிகண்டன் மற்றும் அவரது முதல் மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் மற்றும் 1 ஆண் குழந்தைகள் அவர்களின் பெயர் தெரியாது. எதிர்மனுதாரர் மணிகண்டன் மற்றும் அவரது முதல் மனைவியை பற்றி என்னிடம் வேலைக்கு வந்த பிறகு தான் தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மணிகண்டனின் முதல் மனைவிக்கு மனநலம் சரியில்லாததால் அவர்தான் பராமரித்து வருகிறார் என்பது பற்றி எதிர்மனுதாரர் மணிகண்டன் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

4. எதிர்மனுதாரர் மணிகண்டன் , 1ம் மனுதாரருக்கு திருமணம் நடைபெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மணிகண்டன் , 1ம் மனுதாரருக்கும் சமயபுரத்தில் திருமணம் நடைபெற்ற பிறகு தான் என்னிடம் வேலைக்கு வருகிறார் என்றால் ஆமாம். அவர் என்னிடம் என்ன வேலை செய்கிறார் என்றால் கொத்தனார் வேலை செய்கிறார்.

5. எதிர்மனுதாரர் மணிகண்டன் ஜல்லி, மணல், சிமெண்ட் ஆகியவற்றை விற்கும் புரோக்கர் தொழில் செய்து வருகிறார் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மணிகண்டன் சகோதரி மல்லிகா வீடு கட்டும்போது எதிர்மனுதாரர் மணிகண்டன் ரூ. 3-1/2 லட்சம் பணம், மணல், சிமெண்ட், ஜல்லி ஆகியவற்றை வாங்கி கொடுத்து உதவி செய்ததாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் , ஆனால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான்.

6. 04.07.2007 ந் தேதியில் 3 சென்ட் இடம் வாங்கி அதை 1ம் மனுதாரரின் பெயரில் கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்த கிரைய பத்திரத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்று சொன்னால் சரிதான். மணிகண்டனும், 1ம் மனுதாரர் பிரேமாவும் எவ்வளவு நாட்களாக பிரிந்த வாழ்கிறார்கள் என்ற விவரமும், என்ன பிரச்சனை என்ற விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியாது.

7. மணிகண்டனும், 1ம் மனுதாரர் பிரேமாவுக்கும் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை சம்மந்தமாக ஆசனூரில் நான் பஞ்சாயத்து பேசினேனா என்றால் பேசினேன். அதன் தேதி , மாதம், வருடம் தெரியாது. நான் மேற்படி விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். மணிகண்டனும், 1ம் மனுதாரர் பிரேமாவுக்கும் உள்ள குழந்தைகளின் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது.

8. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் வெங்கடேசன் என்பவரை 1ம் மனுதாரர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்ற விவரம் தெரியவந்தது என்று கூறியுள்ளேன் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது . உளுந்தூர்பேட்டை அண்ணாநகர் முதல் தெருவில் முகமது யூசுப் என்பவர் வீட்டில் வெங்கடேசன் என்பவர் 1ம் மனுதாரருடன் குடும்பம் செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

9. உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1ம்

மனுதாரர் மற்றும் வெங்கடேசன் மீது புகார் அளிக்கப்பட்டு சி,எஸ்.ஆர் 100/2023 ல் என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் குறிபிட்டுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

10. எனது பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் குறிபிட்டுள்ள விவரங்களான வெங்கடேசனுக்கு கல்யாணம் ஆகி பரிமளா என்ற மனைவி உள்ளார் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர் என்ற விவரங்கள் மற்றும் இதர விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 8 வது பத்தியில் குறிபிட்டுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், மணிகண்டன் சொல்லி தான் எனக்கு தெரியும்.

11. தற்போது எதிர்மனுதாரர் தனியாக பில்டிங் காண்ட்ராக்ட் எடுத்தும், சென்டரிங் காண்ட்ராக்ட் எடுத்து வேலை செய்து வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். மணிகண்டன் , பிரேமாவின் குடும்ப விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, ஜீவனாம்ச தொகை பெறகூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Typed by E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.04.07 12:25:13 +0600

Judicial Magistrate-I,
Ulundurpet.